**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.250/2020

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | சுரேந்தர் |
| Father's Name | : | வன்னியராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.10.2025.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஆவேன். நீதிமன்றத்தில் வரப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

1. நான் தபசில் சொத்தை பார்வையிட்டு ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். D E I J பகுதிகள் பாதையாக காட்டப்பட்டுள்ளது.

2. மேற்படி D E I J க்கு தொடர்ச்சியாக கீழ்பக்கம் FMB யில் பொது முடுக்காக காட்டப்பட்டுள்ளது. ஆனால் நான் கீழ்பக்கத்தில் அளக்கவில்லை. வரண்டில் குறிப்பிடப்படவில்லை என்பதால் நான் அளக்கவில்லை.

3. I J பகுதிக்கு மேல்பக்கம் கட்டம் கட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது மாடிப்படிகள். மேற்படி மாடிப்படிகள் வாதிக்கு பாத்தியப்பட்டது.

4. I J பகுதிக்கு கீழ் பக்கம் சுவர் இருப்பதை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் நான் அங்கு பார்வையிடவில்லை.

5. D E F பகுதிகள் வாதிக்கு பாத்தியப்பட்ட சுவர். F ல் இருந்து G வரை 0.5 மீட்டர் இடம் இருந்தது.

6. 1மீ. இருந்ததாக வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. நான் அதற்கு எதும் நான் பதில் கொடுக்கவில்லை.

7. E F பகுதிகளின் அளவை நான் கொடுக்கவில்லை. I H பகுதிகள் எனது அறிக்கையில் 5.2 ஆக குறிப்பிட்டுளளேன் . அதே அளவுகள் தான் E F பகுதியில் இருக்கும் என்றால் அளந்துபார்த்தால் தான் தெரியும்.

8. தாவா சொத்துக்கு தெற்கு பக்கமாக பிரதிவாதிக்கு வீடு உள்ளது. நான் வரண்டின் அடிப்படையில் தான் ஸ்தலத்தை அளந்தேன். பிரதிவாதி வீட்டை அளக்க எனக்கு உத்தரவு வழகங்கப்படவில்லை. ஸ்தல பார்வையின் போது வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் பிரதிவாதி வீட்டை அளக்க கோரிக்கை விடப்பட்டது. ஆனால் பிரதிவாதி வீட்டை அளக்க முற்பட்டபோது என்னை வரண்ட் படி அளக்க கேட்டதால் நான் வாரண்ட் படி அளந்தேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.